**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திருமதி. அன்புகரசி | அசல் வழக்கு எண். | 86/2009 |
| த/பெ. | - | ஆறுமுகம் | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

26.02.2026

**1 ம் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு திருமணம் ஆன போது என் மாமனார் நாகரத்தினம் உயிருடன் இல்லை என்றால் சரிதான். அதன் காரணமாக, வழக்கு சொத்துக்களை என் மாமனார் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1991 ம் ஆண்டில் 1, 2 வாதிகள் மற்றும் என் கணவரான 1 ம் பிரதிவாதி மற்றும் மாமியாரான அமிர்தம்மாள் ஆகியோர்கள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பாகம் ஏற்பட்ட பின்பு 1, 2 வாதிகள், என் கணவரான 1 ம் பிரதிவாதி மற்றும் என் மாமியாரான அமிர்தம்மாள் ஆகியோர்கள் தனித்தனியாக வசித்து வந்தனர் என்றால் என் மாமியார் எங்களுடன் தான் இருந்தார், 1, 2 வாதிகள் தனியாக வசித்து வந்தனர்.

2. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட 19 ஆண்டுகளுக்கு பின்பு தான் என் மாமியாரான அமிர்தம்மாள் என்பவர் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி வாதிகளுக்கு வழக்கு சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மாமியார் என்னுடன் வாழ்ந்து வந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் கணவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் கணவரான 1 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 கிரையத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வீட்டு வரி மற்றும் மின் கட்டண இரசீதுகளான பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.12 வரையிலான

ஆவணங்கள் எந்த சொத்திற்கானது என்று சர்வே எண்ணை என் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனது கணவரான 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல, பாகம் ஏற்படுவதற்கு முன்பு கட்டிய வீட்டில் தான் தற்போது வரை வசித்து வருகிறோம்.

3. பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களுக்கான வீட்டிற்கான சர்வே எண் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. என் கணவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தில் கட்டிய வீட்டிற்கான இரசீதுகள் பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.12 என்றால் சரியல்ல, பாகத்திற்கு முன்பு வீடு கட்டப்பட்டது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ,3 ஆவணங்கள் மூலம் கிரையம் கொடுத்த பின்பு வழக்கு சொத்தில் வாதிகள் தான் உடைமையில் இருந்து அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை என் கணவரான 1ம் பிரதிவாதி எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களின் படி வழக்கு சொத்தில் வாதிகளுக்கு முழு உரிமை உள்ளது என்றும் 1ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்கள் நான் சொல்வதுபோல் சூதுமார்க்கமாக எழுதப்பட்டிருந்தால் 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்தபோதே வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோரி தனியாக வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் வீடு கட்டி அனுபவத்தில் இருந்திருந்தால் அது குறித்து எதிர்வழக்குரையில் சொல்லியிருப்பார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வாதிகள் அனுபவித்தில் இருப்பதை இடையூறு செய்வதற்கு எனக்கு எந்த சட்ட தகுதியும் இல்லை என்றால் சரியல்ல.

1ம் வாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.